**செய்தி வெளியீடு எண்: 668** **நாள்: 08.11.12**

# பத்திரிகை செய்தி

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் (சிப்காட்) தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகள் பொது மேலாண்மை நிலையத்தை (TSDF-Treatment, Storage and Disposal Facility) மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள், தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறையின் முதன்மை செயலர் திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் சு.பாலாஜி ஆகியோர் 7.11.2012 அன்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிலையத்தில் தொழிற்சாலைகளிலிருந்து உருவாகும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சுத்திகரித்து, சேமித்து, விஞ்ஞான முறையில் அமைக்கப்பட்டு நிரப்பியும், எரியும் திறன் கொண்ட கழிவுகளை எரியூட்டி மூலம் எரித்தும், மேலாண்மை செய்து வருகின்றது.

மேற்கூறிய செயல்பாடுகள் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, நிறுவப்பட்டுள்ள மாசு தடுப்பு சாதனங்கள் திறம்படவும், பாதுகாப்பாகவும் இயக்கப்பட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சாலை கழிவுகளை தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலிருந்து எடுத்து வருவதற்கான செலவு அதிகமாக உள்ளது என தொழிற்சாலைகள் தெரிவிப்பதால், நிறுவனம் கழிவுகளை எடுத்துவருவதற்கான போக்குவரத்து கட்டணத்தை குறைக்க முன்வரவேண்டுமென்றும், இதுபோன்ற பொது கழிவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாட்டின் பிறபகுதிகளிலும், குறிப்பாக தொழிற்பேட்டைகளில் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஆலோசனை தெரிவித்தார்.

ஆய்வின்போது, மேற்கண்ட நிலையத்தை நிறுவியுள்ள **"ராம்கி"** குழுமத்தின், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை பிரிவின் தலைவர் திரு. சேஷகிரி ராவ், தொழில் கழிவுகள் மேலாண்மை சங்கத்தின் செயலர் திரு. இராமதாஸ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் திரு. ஆர். குமார் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு. பன்னீர் செல்வம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளும் உடனிருந்தனர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**